முருகப்பெருமான் துணை

**மகான் நொண்டிச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.12.2022**, வெள்ளிக்கிழமை

1. சரவணச்சுடரேற்றி பேருலகில்
சற்குருவாய் ஞானமாக அருளும்
சரவணபவனே அரங்கமகானே
சடாட்சர பலமே உன் பெருமைகூறி
2. கூறியே சுபகிருது சிலை திங்கள்
குறைவிலா முதல் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் முதல் நாள் **16.12.2022**, வெள்ளிக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு நொண்டிச்சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான தருமபலம் பெருக
ஞானமுடன் தருமவழிகாட்டும்
ஞானிகள் பூசைத னை செய்து
4. செய்துமே அரங்கன் காட்டும்
சிறப்பான அன்னதானமதை
அய்யமற உலகம் எங்கிலுமே
ஆற்றல்பட செய்ய கிளைகளை துவக்கி
5. துவக்கியே அரங்கன் நாமத்தில்
தொண்டுகள்தனை செய்துவர
அவனியில் தருமம் பெருகி
அனைவருக்கும் தருமபலத்தால்
6. பலத்தால் வினைகள் விலகும்
பாவ கருமம் இனி சேராதபடி
வளமும் தேகமனோ பலமும்
வரமாக அரங்கன் தயவால்
7. தயவால் கிட்டி சிறப்பும்
தனித்துவமும் கூடி நன்கு
தயவான வாழ்வும் தேற்றமும்
தரணியோர்க்கு சிறந்து விளங்கும்
8. விளங்கவே இந்த புவியில்
விரைந்து ஞானவான் படை
களங்கமற பெருகி நின்று
கலியினில் யாவரும் ஞானியாகும்
9. ஆகும் தேற்றம் கிட்டி
ஆறுமுகனார் வெளிப்பாடுகண்டு
வகையான ஞானத்தலைமை
வையகம் கண்டு ஞானஆட்சி

10. ஞான ஆட்சியாக மாற்றம்
நல்லுலகம் கண்டடையும்
ஞானபண்டிதனாக அருளும்
ஞானியர்பால் ஆசி தீட்சை

11. தீட்சை அடைய சிலை திங்களில்
திடமும் மனத் தெளிவும் கூடி
தீட்சைபலமாக சித்திகள் கூடும்
தெரிவித்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–